# SAINT CASIMIR

# MARCH 4



# *புனித கசீமீர் (1458 – 1484)*

போலந்து நாட்டின் இராஜ குடும்பத்தில் பிறந்தார். இவரது பெற்றோருக்கு 13 மக்கள். அதில் இவர் மூன்றாவது மகன். அரச அரண்மனையில் வளர்ந்த போதிலும் சுகபோகங்களை வெறுத்து ஒறுத்தல் முயற்சிகளை நேசித்தார். அனைவரையும் தம் சகோதரர்களாகவும் தமக்கு சமமானவர்களாகவும் மதித்தார். திருப்பலி, திவ்விய நன்மை, இயேசுவின் பாடுகள், கடவுளின் கன்னித்தாய் மீது அதிக பக்தி உண்டு. ஏழைகளுக்காக தம் பெற்றோரிடம் அநேக உதவிகளைக் கேட்டுப் பெற்றுக் கொடுப்பார். பரிசுத்த கற்பை இழப்பதை விட சாக விரும்புகிறேன் என்பார். தந்தை விரும்பிக் கேட்டமையால் ஹங்கேரி நாட்டு மன்னராக இசைந்து அந்த நாட்டை ஆண்டு வந்தவர் மத்தியாஸ் கோர்வினுஸ் என்பவர். அவரை பதவியில் இருந்து இறக்க மக்கள் தீர்மானித்திருந்தனர். எனினும் இவர் அரச பதவி ஏற்க வேண்டிய இடத்தை அடைந்ததும் அரசருக்கும் மக்களுக்கும் இடையே உள்ள வேற்றுமைகள் சரிப்படுத்தப்பட்டன என்று அறிந்து மகிழ்ச்சியுடன் தம் ஊருக்குத் திரும்பினார். கோவில் கதவுகள் பூட்டப்பட்டு இருந்தாலும் வெளியே முழந்தாளிட்டு இரவில் நெடுநேரம் செபிப்பார். தரையில் படுத்துறங்குவார். தேவதாயை 'என் நல்ல தாய்' என்பார். மணஞ்செய்ய மறுத்து விட்டார். 26-ஆம் வயதில் காசநோயால் இறந்தார்.

**சிந்தனை:**

உயிரை விட பரிசுத்த கற்பை அதிகமாக மதிக்க வேண்டும்.

**செபம்:**

ஆண்டவரே, நாங்கள் சாகும்வரை கற்புள்ளவர்களாக இருக்க உதவி செய்யும்.


SAINTS FUN FACTS
Saint Casimir, a Polish prince, shunned material things and lived a prayerful and religious life. Giving into his father's demands to lead an army into Hungary, many soldiers fled the impending battle. Casimir returned home where his father imprisonedd him for life.
Where'd everyone go?
SHEPPARD
(C) 2014 Distributed by Catholic Online www.catholic.org Written & Illustrated by John Sheppard